பன்னிரண்டாம் வகுப்பு பொருளியல்
முழு ஆண்டு தேர்வு-2023
வினா விடைகள்.

B

பகுதி அ

I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும். 20 X 1 = 20.

வினா எண்	விடைகள்	வினா எண்	விடைகள்
1	ஈ) அ மற்றும் ஆ	11	ஈ அமெரிக்கா
2	ஆ) ஒருமை மற்றும் பன்மை	12	இ National Institution for Transforming India
3	ஈ) மேற்கூறிய அனைத்தும்	13	இ சுங்கவரி ஒன்றியம்
4	அ) 2030	14	ஈ சட்ட பூர்வ பண அளிப்பு
5	ஈ) வருவாய் கோட்பாடு	15	இ சேமிப்பு
6	அ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்	16	இ கட்டமைப்பு
7	அ) வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது	17	ஈ பொருளாதார நலன்
8	ஆ) சந்தையிடா பொருட்கள்	18	இ July 1, 1963
9	அ) அங்காடி விதி	19	ஈ உலக வங்கி
10	இ) 500 மற்றும்1000	20	இ வணிக சுழற்சி

பகுதி ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை அளிக்கவும் வினா எண் 30 கட்டாயம் விடை அளிக்கவும் . 7 x 2 = 14

வினா எண்	விடைகள்	மதிப் பெண் கள்
21	**பொருளாதார மாதிரி** 1. கணித பொருளியலில் மாதிரிகள் பொருளாதார கோட்பாடுகளின் அடிப்படையில்உருவாக்கப்படுகிறது. **புள்ளியியலில் ஒட்டுறவு மாதிரி:** புள்ளியியலில் இருக்கும் ஒட்டுறவு மாதிரியில் பிழைக் கருத்து இல்லை. **Yi = β0 + β1Xi**	2
22	**GDP குறைப்பான் இலக்கணம் தருக.** $\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$	2
23	**சே விதியின் எடுகாள்களை பட்டியலிடுக.** 1. முழு வேலைநிலை நிலவுகிறது. 2. உழைப்பு மற்றும் பண்டங்கள் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது. 3. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு. 4. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும். 5. அரசின் செயல்பாடுகள் ஏதும் இல்லை.	2
24	**பெருக்கி - வரையறு** தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். எனவே பெருக்கி K = ΔY / ΔI. என உள்ளது.	2
25	**பணத்தின் இலக்கணம் வரைக .** வாக்கர் கூற்றுப்படி "பணம் எதைச் செய்கிறேதா, அதுதான் பணம்	2
26	**CRR மற்றும் SLR ஆகியவற்றினைவேறுபடுத்துக.** வணிக வங்கிகள் தங்கள் வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை மைய வங்கியில் இருப்பாக	2

www.Padasalai.Net

<table>
<tr><td></td><td>வைக்க வேண்டும். இதுவே ரொக்க இருப்பு வீதம் (CRR) எனப்படும் சட்டப்பூர்வ நீர்மை விகிதமானது (SLR) வணிக வங்கிகள் தங்கள் வசம் வைத்திருக்க வேண்டிய நீர்மைச் சொத்துக்களின் விகிதம் ஆகும்.</td><td></td></tr>
<tr><td>27</td><td>வாணிபச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?
ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனை அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துநிலை என்கிறோம். இது இரட்டைப் பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும்.</td><td>2</td></tr>
<tr><td>28</td><td>எங்கு மற் றும் எப்பொ ழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?
நேப்பாள் தலைநகரம் காட்மண்டு இதன் தலைமை அலுவலகம் ஆகும். ஜனவரி16,1987 முதல் செயல்படத் தொடங்கியது.</td><td>2</td></tr>
<tr><td>29</td><td>பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடுக
மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத் தேவையை நிவர்த்தி செய்வதை சமூக குறியீடுகள் என அழைக்கப்படுகிறது. நேரடியாக வழங்கப்படும் அடிப்படைத் தேவை என்பது மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு மற்றும் வீட்டு வசதி ஆகியவையாகும்.</td><td>2</td></tr>
<tr><td>30</td><td>விவரிப்பு புள்ளியிலுக்கும், உய்த்துணர்வு புள்ளியியலுக்கும் உள்ள வேறுபாடுகள்
<table>
<tr><th>ப.எண்</th><th>விவரிப்பு புள்ளியியல்</th><th>உய்த்துணர்வு புள்ளியியல்</th></tr>
<tr><td>1.</td><td>ஆய்வில் உள்ள முழுத்தொகுதியையும் விளக்குகின்றது</td><td>மாதிரி ஆய்வின் அடிப்படையில் முழுத்தொகுதி பற்றி முடிவெடுக்கப்படுகின்றது</td></tr>
<tr><td>2.</td><td>புள்ளி விவரங்களை வரைபடங்களாகவும் விளக்கப்படங்களாகவும் வழங்குகின்றது</td><td>கருதுகோள்களை சோதனை செய்து கணிக்கின்றது</td></tr>
<tr><td>3.</td><td>புள்ளிவிவரங்களின் சுருக்கங்களைத் தருகின்றது</td><td>மாதிரியைத் தாண்டி முழுத்தொகுப்பினை அறிந்து கொள்ள பயன்படுகின்றது</td></tr>
</table></td><td>2</td></tr>
</table>

பகுதி –இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை அளிக்கவும் .
வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும் . 7 x 3 = 21

வினா எண்	விடைகள்	மதிப்பெண்கள்
31	**சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.** 1. சிவப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம். 2. ஊக்கமில்லாமை 3. தெரிவு செய்வதில் சதந்திரமின்மை. 4. அதிகார குவிப்பு	3
32	**காரணி செலவில் NNP – விவரி.** காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும். காரணி செலவில் NNP என்பது சந்தை விலையில் NNPயின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியைக் கழிக்க வேண்டும் மேலும் மானியங்களைக் கூட்ட வேண்டும்.	3
33	**தொகு தேவைஎன்றால் என்ன?** **அதன்கூறுகளைக்கூறுக.** கீன்சு கோட்பாட்டின்படி ஒரு பொருளாதாரத்தின் தொகுதேவை தான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. தொகுதேவை நான்கு கூறுகளை கொண்டுள்ளது அவை 1. நுகர்வுத் தேவை, 2. முதலீட்டுத் தேவை, 3. அரசுச் செலவு. 4. நிகர ஏற்றுமதி. AD = C + I + G + (X - M)	3
34	**தன்னிச்சையான முதலீடு மற்றும்தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.**	3

www.Padasalai.Net VCP CHANDRAN

தன்னிச்சையான முதலீடு	தூண்டப்படுகிற முதலீடு
தன்னிச்சையானது	திட்டமிடப்பட்டது
வருவாயைப் பொறுத்து நெகிழாதது.	வருவாயைப் பொறுத்து நெகிழ்வது.
நல நோக்கமுடையது	இலாப நோக்கமுடையது

35 **தேவை -இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.** **3**

தேவை -இழுப்பு பணவீக்கம் .

பண்டங்களுக்கான் தேவை அதிகரிக்கும் போது விலை அதிகரிக்கிறது.
இது தேவை இழுப்பு பணவீக்கம் எனப்படும்

செலவு உந்து பணவீக்கம் .

உற்பத்திச் செலவு அதிகரிக்கும் போது பண்டங்களுக்கான் விலை அதிகரிக்கிறது. இது செலவு உந்து பணவீக்கம் எனப்படும்

36 **நபார்டின் பணிகள் யாவை?** **3**

1. நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர் ச்சியை மேம்படுத்தும் வகை யில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக மறுகடனை வழங்குகிறது.
2. மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது
3. மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.
4. நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது.

37 **பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக** **3**

1. தூய வாணிபக் கோட்பாடு

	2. கொள்கைச் சச்சரவுகள் 3. பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும் 4. பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குபடுத்தும் நிறுவனங்கள்	
38	**பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல் பற் றி எழுதுக.** பத்தாவது உச்சி மாநாடு தென்ஆப்பிரிக்காவில் ஜீலை 2018ல் நடை பெற்றது. உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகப் பிரச்சனை கள், உலகளாவிய அரசு நிர்வா கம், பகிரத்தக்க வளமை , நாடுகளின் அமை தி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சி மாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.	3
39	**புள்ளியியலின் பணிகள் யாவை?** 1. புள்ளியியல்விவரங்களை துல்லியமானவடிவில்வழங்குகிறது. 2. இது பரந்தவிவரங்களை சுருக்கித் தருகிறது. 3. இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது. 4. இது எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது. 5. இது மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது. 6. கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.	3
40	மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள்(சரத்து 269 – ன் படி) 1. விவசாய நிலம் தவிர்த்தஇதர சொத்துகள் மீதானவரி 2. பண்ணைவரி (வேளாண்மைநிலம் தவிர்த்த) 3. இரயில்வேகட்டணங்கள் மற்றும் சரக்கு கட்டணங்கள். 4. பங்குச்சந்தைமற்றும் எதிர்காலசந்தைபரிவர்த்தனைகளில்முத்திரைவரிகளை தவிர வேறு வரி. 5. செய்திதாள் மீதானவரி (அதில்வெளியிடும் விளம்பரம் உட்பட) 6. இரயில், கடல்வழி மற்றும் ஆகாய மார்க்கமாக செல்லும் பயணிகள் மற்றும் சரக்குகள் மீதானவரி. 7. மாநிலங்களுக்கிடையேயானபண்டங்கள் விற்பனை மற்றும் வாங்குதல்மீதானவரி (செய்தித்தாள் தவிர)	3

www.Padasalai.Net

பகுதி - ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.
7 x 5 = 35.

<table>
<tr><th>வினா எண்</th><th>விடைகள்</th><th>மதிப்பெண்கள்</th></tr>
<tr><td>41அ</td><td>

முதலாளித்துவ, சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக

<table>
<tr><th>எண்</th><th>தன்மைகள்</th><th>முதலாளித்துவம்</th><th>சமத்துவம்</th><th>கலப்புத்துவம்</th></tr>
<tr><td>1</td><td>உற்பத்தி மூலங்களின் உரிமை</td><td>தனியார் உரிமை</td><td>பொது (அரசு) உரிமை</td><td>தனியார் மற்றும் பொது உரிமை</td></tr>
<tr><td>2</td><td>பொருளாதார நோக்கம்</td><td>இலாபம்</td><td>சமூக நலன்</td><td>மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை.</td></tr>
<tr><td>3</td><td>மைய பிரச்சனைகளின் தீர்வு</td><td>தடையில்லா சந்தை முறை</td><td>மத்திய திட்டமுறை</td><td>குறைந்த பங்கு</td></tr>
<tr><td>4</td><td>அரசின் பங்கு</td><td>உள்ளீடு கட்டுப்பாடுமட்டும்</td><td>முழு ஈடுபாடு</td><td>குறைந்த சமநிலைபற்ற நிலை.</td></tr>
<tr><td>5</td><td>வருவாய் பங்கீடு</td><td>சமமற்ற நிலை</td><td>சம நிலை</td><td>தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள்</td></tr>
</table>

</td><td>5</td></tr>
<tr><td>41 ஆ</td><td>

தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம். அவை:
1. உற்பத்தி முறை, 2. வருவாய் முறை மற்றும் 3. செலவு முறை

இம்மூன்று முறைகளை சரியாக பயன்படுத்தி கணக்கிட்டால் உற்பத்தி , வருமானம், செலவு இம்மூன்றின்மதிப்பும் சமமாக இருக்கும்.

1. உற்பத்தி முறை,

</td><td>5</td></tr>
</table>

	உற்ப த்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்ப த்தியை கணக்கிடுவது ஆகும். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொ ழில், வணிகம் போ ன்ற துறை களின் உற்ப த்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும். ஒரே பொருள் இரு முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். **2. வருவாய் முறை.** வருமான முறை என்பது பகிர்வு பகுதியிலிருந்து கணக்கிடுவது ஆகும். உற்ப த்தி நிலைகளில் உற்ப த்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களை யும் கூட்டி தே சிய வருமானத்தைக் கணக்கிடலாம். **3. செலவு முறை.** இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தசெலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. தனிநபர் சுய நுகர்வு செலவுகள்,(C). நிகர உள்நாட்டு முதலீடு,(I) அரசின் கொள்முதல்(G) மற்றும் நிகர ஏற்றுமதி(X- M) போன்ற செலவுகளை கூட்டி கணக்கிடப்படுகிறது.	
42அ	**வேலையின்மைகளின் வகைகளை விவரி** **வேலையின்மை:-** வேலை செய்யை தகுதியும், விருப்பமும் இருந்தும் வேலை கிடைக்காத நிலை வேலையின்மை எனப்படும். **1. வாணிபச் சூழல் வேலையின்மை.** வாணிப சூழலின் பின்னிறக்க பகுதியில், உற்பத்தி மற்றும் வருமானம் குறை ந்து வேலையின்மை அதிகரிக்கும். இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாத போது நிகழ்வதாகும் **2. பருவகாலவேலையின்மை** ஒரு வருடத்தின் சிலகாலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகாலவேலையின்மை என்று பெயர். **3. உடன்பாடில்லா வேலையின்மை** உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால்	5

www.Padasalai.Net

	உடன்பாடில்லா வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர் . **4.படித்தவர்வேலையின்மை** சிலநேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது இல்லை இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர். **5. மறைமுக வேலையின்மை** வேலையிலிருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தியின் அளவு குறையாது. ஏனென்றால் அவர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறன் ஒன்றுமில்லை. இதுவே மறைமுக வேலையின்மை அல்லது குறைவேலையுடைமை எனப்படும்	
42 ஆ	**மூலதனத்தின் இறுதிநிலை உற்ப த்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்ப த்தி திறனுக்கும் (MEI) உள்ள வே றுபாடுகள் யாவை ?**	**5**

S.N	மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC)	முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI)
1	இது மூலதனத்தின் அளிப்பு விலையைப்பொறுத்து அமைகிறது.	மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது.
2.	ஆரம்ப த்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடை க்கும் விளைவைக் குறிக்கிறது.	ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது.
3	வரை படத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது	வரை படத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது.
4	இது ஒரு “இருப்பு” கருத்துரு.	இது ஒரு ஓட்டக் கருத்துரு
5	ஒவ் வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது	கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது.

43அ கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரை படம் மூலம் விளக்குக. **5**

<u>நுகர்வுச் சார்பின் உளவியல் விதி</u>

கீன்ஸ் உளவியல் அடிப்படையில் நுகர்வுச் சார்பை உருவாக்கினார். இவ்விதி மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்ய மாட்டார்கள் என எடுத்துக் கூறுகிறது.

<u>அனுமானங்கள்.</u>

1. மற்றவை மாறாது
2. சுமுகமான சூழல் நிலவுகிறது.
3. முதலாளித்துவத்தில் தலையிடாக் கொள்கை கடைபிடிக்கப்படுகிறது.



<u>விதியின் கருத்துக்கள்</u>

1. வருமானம் உயரும்போது ,நுகர்வுச் செலவும் அதிகரிக்கும் ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.
2. அதிகரித்த வருமானம், நுகர்வு மற்றும் சேமிப்பிற்கும் இடையே பிரிக்கப்படுகின்றது
3. அதிகரித்த வருமானம், எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பை அதிகரிக்கச் செய்யும்.

43 ஆ — **தொன்மைக்கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.** — 5

எண்	கீன்ஸியம்	தொன்மையியம்
1.	குறுகிய காலச் சமநிலை	நீண்ட காலச் சமநிலை
2.	சேமிப்பு கெடுதல்	சேமிப்பு நல்லது
3.	பணத்தின்பணி என்பது ஒருபுறம்பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும்	பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்
4.	நாட்டின் பிரச்சனைகளை தாக்க பேரியல் அணுகுமுறை தேவை	நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை
5.	அரசு தலையீடு அனுமதிக்கப்படுகிறது	தலையிடாக் கொள்ளை வலியுறுத்தப்படுகிறது
6	பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது	சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது.
7	வட்டி வீதம் மாறிக் கொண்டே உள்ளது	வட்டி வீதம் மாறாதது
8	தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது	அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது
9	வட்டி என்பது ரொக்கஇருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி	வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி
10	முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம்	முதலாளித்துவம் சரியானது

ஏதேனும் ஐந்து

44அ — **பணத்தின் பணிகளை விளக்குக.** — 5

பணத்தின் பணிகள்.

I. முதன்மைப் பணிகள்.

1. பணம் ஒரு பரிவர்த்தனை கருவி.

நவீன பரிவர்த்தனைகளில் பணம் ஒரு இடையீட்டு கருவியாக செயல்பட்டு வருகிறது.

2. பணம் ஒரு மதிப்பின் அளவுகோல்.

ஒரு பண்டத்தை வாங்கும் பொழுது அதன் விலையை பணமாகக் கொடுக்கிறோம். ஆகவே பண்டத்தின் மதிப்பு பணத்தால் அளவிடப்படுகிறது.

www.Padasalai.Net

	II. இரண்டாம் நிலைப் பணிகள் 1. பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலன். சொத்துக்களை சேமித்து வைக்க விரும்புபவனுக்கு பணம் எளிய வசதியான கருவி ஆகும். 2. பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை : எதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாக பயன்படுகிறது. 3. பணம் வாங்குதிறனை மாற்றிக் கொள்ளும். எல்லை கடந்தும் பரிவர்த்தனைகள் நடைபெறுகிறது. இதனால், ஓரிடத்திலிருக்கும் வாங்குதிறன் மாற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. **III துணைப் பணிகள்** i. கடன்முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது. ii தேசிய வருவாயை எளிதாக பகிர்ந்தளிக்க உதவுகிறது. (வாரம், கூலி, வட்டி மற்றும் இலாபம்). iii. இறுதிநிலைப் பயன் பாடுகளை ஒப்பிடவும், இறுதிநிலை உற்பத்தி திறன்களை ஒப்பிடவும் பணம் பயன்படுகிறது: iv. பணம் மூலதனத்தின் உற்ப த்தி திறனை உயர்த்துகிறது. **IV. இதரபணிகள்.** i திரும்ப ச் செலுத்தும் திறனை தக்கவைக்க பணம் உதவுகிறது. ii. பணம் பொதுமைப் படுத்தப்பட்ட வாங்கு திறனை குறிக்கிறது. iii. பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையை தருகிறது	
44 ஆ	**உள்நா ட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடை யிலான வே றுபாடுகளை விவாதிக்கவும்**	**5**

வ. எ	உள்நாட்டு வாணிகம்	பன்னாட்டு வாணிகம்
1.	ஒரு நாட்டிற்குள் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையே நடைபெறும் வாணிகம்	பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான வாணிகம்
2.	உழைப்பு மற்றும் மூலதனம் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல்	உழைப்பு மற்றும் மூலதனம் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது
3.	பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை	பொருட்கள் மற்றும் பணிகள் இடம் பெயர்தலைசுங்கவரி மற்றும் பங்களவு போன்ற தடைகள் கடினமாக்குகின்றன.
4.	விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன் படுத்தப்படுகிறது	பல நாட்டு பணங்கள் பயன் படுத்தப்படுகிறது.
5.	புவி அமைப்பு மற்றும் கால நிலை சூழல் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும்	புவி அமைப்பு மற்றும் கால நிலைவேறுபடும் இயல்பு கொண்டவை
6	வாணிக மற்றும் நிதி நடை முறைகள் ஒரே மாதிரியானவை	வாணிகம் மற்றும் நிதி நடை முறை கள் வேறுபடும் போக்குக் கொண்டவை
7	அரசமைப் புமுறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை	அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் அரசின் கொள்கைகளில் வேறுபாடுகளிருக்கும்

45அ **பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி** **5**

திட்டமிடுதலின் வகைகள்

1. மக்களாட்சி திட்டமிடுதல் மற்றும் சர்வாதிகார திட்டமிடுதல்

திட்டமிடுதலின் அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக்கொள்ளும் முறையே மக்களாட்சி திட்டமிடுதல் ஆகும்

பொருளாதார அனைத்து நடவடிக்கைகளும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் முறையே சர்வாதிகார திட்டமிடுதல் ஆகும்.

2. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல்.

திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் இது மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதல்ஆகும். இது மேலிருந்து திட்டமிடுதல் எனப்படும்

பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல். என்பது மத்திய திட்டக்குழுவின் கட்டுப்பாடின்றி செயல்படும் முறையாகும் இது கீழிருந்து திட்டமிடுதல் எனப்படும்

	3. வழிகாட்டும் திட்டமிடுதல் மற்றும் தூண்டும் திட்டமிடுதல் வழிகாட்டும் திட்டமிடுதல் என்பது திட்டக்குழுவின் வழிகாட்டுதலின்படி, முன்பே முடிவு செய்யப்பட்ட இலக்குகள் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் திட்டம் செயல்படுத்தப்படுதல் ஆகும்.தூண்டும் திட்டமிடுதல் என்பது திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை மக்களைக் கொண்டே செயல்படுத்துவதாகும். **4. சுட்டிக்காட்டும் திட்டமிடுதல் மற்றும் கட்டாயமான திட்டமிடுதல்** அரசு திட்டமிடுதலின் இலக்குகளை நிர்ணயித்து அதை தனியார் நிறுவனங்கள் அடைவதற்கு தேவையான வசதிகளை செய்து தருவதாகும் கட்டாயமான திட்டமிடுதல் என்பது திட்டம் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துகளில் அரசு அதிகாரமிக்கது. திட்டம் தயாரித்து முடித்துவிட்டால் எவ்வித தடைகளுமின்றி திட்டங்கள் செயல்படுத்தப்படும். **5. விரிவான மற்றும் பகுதித் திட்டமிடுதல்.** நாட்டின் அனைத்து பொருளாதாரப் பிரச்சனைகளை தீர்பதற்கான திட்டமிடல் விரிவான திட்டமிடுதலாகும்.ஒரு சில துறைகளுக்கு மட்டும் இலக்குகள் நிர்ணயித்து அதை அடைய தீட்டப்படும் திட்டங்கள் பகுதித் திட்டமிடுதல்.ஆகும்.	
45 ஆ	**பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை ? விளக்குக.** **பணக்கொள்கையின் நோக்கங்கள்** *1. பணத்தின் நடுநிலைத் தன்மை* பொருளாதாரத்தில் பணம் நடுநிலைத் தன்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் பணவியல் மாற்றங்கள் பொருளாதார அமைப்பில் இடையூறுகளை ஏற்படுத்தும். *2. விகித நிலைத்தன்மை* பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மை ஏற்படுவது பன்னாட்டு வாணிபத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இவ் விகிதங்களில் நிலையற்றத் தன்மை இருந்தால் அது பன்னாட்டு வாணிபத்தை பெரிதும் பாதிக்கும். *3. விலையை நிலையாக இருக்கச் செய்தல்.* விலையில் நிலைத்தன்மை, பொதுமக்களிடமும் வாணிப நடவடிக்கைகளிலும் பொதுவான	5

	நம்பிக்கையை ஏற்படுத்தும். மிதமான விலை ஏற்றம் பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும். இது நிலையான விலையின் பண்புகளைக் கொண்டதாக இருக்கும். *4. முழு வேலைவாய்ப்பு நிலையை அடைதல்* உலகப் பெருமந்தம் வேலையின்மையை அதிகரித்தது. முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாக இருந்தது. மேலும் கீன்சின் பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப் படுத்தியது. *5. பொருளாதார வளர்ச்சி* நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். தேவை மற்றும் அளிப்பிற்கிடையே சமநிலையை ஏற்படுத்த நெகிழ்சியுடன் கூடிய பணவியல் கொள்கை ஒரு சிறந்த வழி முறையாகும். *6. செலுத்து சமநிலையில் சமநிலையை பராமரித்தல்.* பன்னாட்டு வணிபத்தில் ஏற்படும் சமனற்ற நிலை பொருளாதாரத்தை பெருமளவு பாதிக்கும் . ஆகவே பணவியல் கொள்கை செலுத்து சமநிலையில் சமநிலையை பராமரிப்பதை குறிக்கோளாக கொண்டிருக்கிறது.	
46அ	**GST** இ ந் தி யா வி ல் காணப்பட்டபல்வேறு மறைமுக வரிகளுக்கு மாற்றாக சரக்கு மற்றும் சேவைவரி கொண்டு வரப்பட்டது.. சரக்கு மற்றும் சேவைகள் வரி சட்டம் பாராளுமன்றத்தில்2017 மாரச்29-ல்நிறைவேற்றப்பட்டு. 2017 ஜுலை1 முதல்நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. **GST – ன் நன்மைகள்:** 1. வரி மீதானவரி இம்முறையில்நீக்கப்படுவதால்பொருட்களுக்கான செலவு குறைகிறது.. இது நேரிடையாக பொருட்களின் செலவில்பிரதிபலிக்கிறது. 2. GST எனப்படுவது தொழில்நுட்பரீதியில் அமைந்ததாகும். பதிவு செய்தல், வரித் தாக்கல்செய்தல்கூடுதலாக செலுத்தியதைதிரும்பப்பெருதல், கோரிய விளக்கங்களுக்கு பதிலளித்தல்போன்றவற்றைGST இணையத்தில்செய்யப்படுகிறது. இதனால்அனைத்து செயல்பாடுகளும் விரைவாக நடைபெறுகிறது.	**5**

46 ஆ	**நில மாசுவிற்கான காரணங்கள் யாவை? அதற்கான தீர்வுகளை குறிப்பிடுக.** **நில மாசு** திட, திரவ மற்றும் வாயு வடிவிலான கழிவுகளை நிலத்தில் கொட்டுவதால் அதன் தன்மை குறிப்பிடத்தகுந்த அளவுக்குப் பாதிக்கப்பபட்டு நிலம், நிலத்தடி நீர், தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தும் நிலையை நிலமாசு என்கின்றோம் 1. காடுகளை அழித்தல் 2. விவசாய நடவடிக்கைகள் 3. சுரங்கத் தொழில்கள் 4. மண்ணில் புதைத்தல். 5. தொழில்மயமாதல். 6. கட்டுமானப் பணிகள். 7. அணுமின் விரயங்கள். **தீர்வுகள்.** இயற்கையாகவே அழிந்து, மண்ணுக்கு சேதம் விளைவிக்காத பொருள்களைப் பயன்படுத்துவது பூச்சிகொல்லி மருந்துகளை குறைந்த அளவில் பயன்படுத்துதல். பலவகைப் பயிர்களைப் பயிரிட்டு மண் வளம் காத்தல். பயிர்ச்சுழற்சி முறை மண்ணின் வளத்தைக் கூட்டும் என்கிறார்கள். தேவையில்லாத குப்பைகளை எரித்தோ அல்லது புதைத்தோ அப்புறப்படுத்துதல். மிகக் குறைவான நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்துதல்.	5

www.Padasalai.Net

47அ	தீர்வு (table below) $\bar{x} = 311/10 = 31.1 \quad A = 31$ $\tilde{y} = 257/10 = 25.7 \quad A = 25$ $\therefore r = \frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$ $r = \frac{10\,x\,187 - 1x9}{\sqrt{(10\,x\,203) - (1^2)}\sqrt{(10\,x\,183) - 9^2}}$ $r = \frac{1870 - 9}{\sqrt{2030 - 1}\sqrt{1830 - 81}}$ $r = \frac{1861}{\sqrt{2029}\sqrt{1749}} = \frac{1861}{(45.04)(41.82)} = \frac{1861}{1883.57} = 0.9880$	5
47 ஆ	**பொது நிதியின் எல்லைகளை விளக்குக.** **வரைவிலக்கணம்:-** "அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும். கொள்கை களையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும் ".-ஆடம் ஸ்மித் **பொது நிதியின் எல்லை** **1. பொது வருவாய்:-**பொது வருவாய் என்பது வரி மற்றும் வரியல்லா வருமானங்கள் பற்றியும், அவற்றின் விளைவுகள் பற்றியும் விளக்குகிறது. **2. பொதுச் செலவு:-** பொதுச் செலவு என்பது அரசின் செலவு, பொதுச் செலவின் விளைவுகள் மற்றும் கட்டுப்ப டுத்துதல் ஆகியவற்றையும் விளக்குகிறது. **3. பொதுக் கடன்:-** பொதுக் கடன் என்பது அரசின் கடன். இதில் பொதுக் கடன்களின் சுமை, அதன்	5

NO	X	Y	$x - \bar{A}$ dx	$(x-\bar{A})^2 = dx^2$	$y - \tilde{A}$ = dy	$(y-\tilde{A})^2$ = dy^2	dxdy
1	23	18	23 – 31 = - 8	64	18 – 25 = - 7	49	56
2	27	22	27 – 31 = - 4	16	22 – 25 =- 3	9	12
3	28	23	28 – 31 = - 3	9	23 – 25 = -2	4	6
4	29	24	29 – 31 = -2	4	24 – 25 = -1	1	2
5	30	25	30 – 31 = -1	1	25 – 25 = 0	0	0
6	31	26	31 – 31 =0	0	26 – 25= 1	1	0
7	33	28	33 – 31 = 2	4	28 – 25 = 3	9	6
8	35	29	35 – 31 = 4	16	29 – 25 = 6	36	24
9	36	30	36 – 31 = 5	25	30 – 25 = 5	25	25
10	39	32	39 – 31 = 8	64	32 – 25 = 7	49	56
N=10	311	257	Σdx = 1	Σdx^2 =203	Σdy = 9	Σdy^2 =183	187

	விளைவுகள் மற்றும் திரும்பச்செலுத்தும் முறைபற்றி விளக்குகிறது. **4. நிதி நிர்வாகம்:-** அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றி விளக்குகிறது. வரவு செலவு திட்டத்தின் நிதி ஒதுக்கீடு, மதிப்பீடு மற்றும் தணிக்கை போன்றவைகள் நிதி நிர்வாகத்தின் கீழ் வருகிறது **5. நிதிக் கொள்கை:-** வரிகள், மானியங்கள், பொதுக்கடன் மற்றும் பொதுச்செலவு ஆகியவைகள் நிதிக்கொள்கையின் கருவிகளாகும்	

VGP CHANDRAN
www.Padasalai.Net